மங்கள வைபவங்களுக்கு தேவையான பட்டுப் புடவைகள் மற்றும் சிறுவர்களுக்கான தெரிவுகளுக்கு
❊ சோபனா ❊
ஆடை அகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில் சோபிக்க சோபனா
❊ சோபனா ❊
ஆடை அகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 28 புதன்கிழமை (11 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 164

## பிரேமா சிலை திறப்பு விழாவில் வைத்து

# மே தினத்தன்று டி.பியையும் ஜே.ஆரையும் கொல்லச் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்ததாம்!

## அதனால் நிகழ்ச்சிக்கு வராமல் பின்வாங்கினார் விஜேதுங்கா

கொழும்பு, மே 11

முன்னாள் ஜனாதிபதி ஜே, ஆர், ஜெயவர்த்தனாவையும் தற்போதைய ஜனாதிபதி டி,பி· விஜேதுங்காவையும் கடந்த மே தினத்தன்று ஒரே நிகழ்ச்சியில், வைத்து கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்ததாம்,

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிலைத் திறப்பு விழாவின் போது இடம்பெறவிருந்த இந்தத் தாக்குதல் குறித்து தகவல் கிடைத்ததை அடுத்தே, அந்நிகழ்ச்சிக்கு வராமல் ஜனாதிபதி விஜேதுங்கா இறுதி நேரத்தில் பின்வாங்கினார்·

சிலை திறப்பு வைபவத்துக்கு ஜனாதிபதி விஜேதுங்கா கடைசி நேரத்தில் செல்லாததால் இந்த படுகொலைத் திட்டம் கைவிடப்பட்டது

'லக்திவ' சிங்கள வார இதழ் அதன் தலைப்புச் செய்தியாக இதனைப் பிரசுரித்துள்ளது.

இந்தப் படுகொலைத் திட்டம் குறித்து தேசிய இரகசிய புலனாய்வுத்துறை ஏற்கனவே அறிந்து கொண்டு எச்சரித்திருந்தது என்றும்—

சுகவீனத்தைக் காரணம் காட்டி பிரேமதாச சிலை திறப்பு விழாவில் ஜனாதிபதி விஜேதுங்கா கலந்து கொள்ளாததற்கு இதுவே காரணம் என்றும் மேலும் அச்செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படுகொலைக் கொழும்பு கோட்டை செபஸ்தியன் ஹில்லிலுள்ள பிரேமதாச சிலைக்கு சமீபமாகவே நடத்த திட்டமிடப்பட்டிருந்தன.

மனித குண்டு ஒன்றின் மூலமே இருவரையும் கொல்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மே முதலாம் திகதி பிரேமதாச சிலையை டி.பி. விஜேதுங்கா திறப்பதாக இருந்தார். ஜே ஆரும், திருமதி ஹேமா பிரேமதாசாவும் இவ்வைபவத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஹேமா பிரேமதாச திறப்பு வைபவத்துக்கு தாமதித்து வந்திருந்தார். ஜே. ஆர் ஜெயவர்த்தனா மட்டும் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தார். (இ-க-6)

### வடமராட்சியில் மீனவரை நோக்கி தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 11

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்பகுதியில் மீனவர்களின் படகுகளை நோக்கி நேற்றுக் காலை 6. 15 மணியளவில் கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலையடுத்து மீனவர்கள் தமது தொழிலைக் கைவிட்டு கரை திரும்பினர். (உ-3-177)

### மரணப்படையின் தலைவரான

## 'சொத்தி' உபாலி குறித்து தகவல் கேட்கிறது பொலீஸ்

கொழும்பு, மே 11

தெற்கில் இயங்கிய மரணப் படைகளில் ஒன்றின் தலைவரான ''சொத்தி'' உபாலி குறித்த தகவல்களைத் தருமாறு ஸ்ரீலங்கா பொலீஸார் நேற்று பொதுமக்களிடம் பகிரங்க கோரிக்கையை விடுத்தனர்.

அரம்பவலகே டொன் உபாலி ரஞ்சித் எனப்படும் ''சொத்தி'' உபாலி கடந்த வாரம் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வைத்து சிந்திக எனபவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதற்கு பொறுப்பான சந்தேக நபர் என்றும் —

அவர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு பொதுமக்கள் தெரிவிக்கவேண்டும் என்றும்—பத்திரிகைகள் தொலைக்காட்சி உட்பட பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பொலீஸார் கேட்டுள்ளனர். (உ-6-162)

### சொத்தி உபாலி பற்றி தகவல் தருக!

## பொலீஸாரின் கோரிக்கை: பொதுமக்கள் பரிகாசம்

கொழும்பு, மே 11

'சொத்தி' உபாலி குறித்து தகவல் தருமாறு பொலீஸார் விடுத்திருக்கும் பகிரங்க வேண்டுகோள் குறித்து தென்பகுதி மக்கள் பரிகாசம்செய்வதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது

கடந்த 17 ஆண்டு காலமாக பொலீஸாரின் பாதுகாப்பின் கீழ் — பொலீஸாரின் உற்ற நண்பனாக — விளங்கியவரைப் பற்றி தங்களுக்குத் தகவல் தருமாறு பொதுமக்களிடம் பொலீஸார் கேட்டிருப்பதே பரிகாசத்துக்குக் காரணமாகும்

'சொத்தி' உபாலியை நல்லமுறையில் பேணி, காத்து வந்தவர் கொழும்புப் பகுதி பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஏ எஸ். செனிவிரத்தின என்றும் —

கொழும்பு குற்றத்தடுப்பு பொலீஸ் பகுதியைச் சேர்ந்த பல பொலீஸ் அதிகாரிகள் சொத்தி உபாலியின் நண்பர்கள் என்றும் —

அரச உயர்பீடத்தில் இருந்தவர்களின் விருப்பத்துக்கு இணங்க கொலை நடவடிக்கைகளை இந்த மரணப்படைத் தலைவர் மேற்கொண்டு வந்தார் என்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்க படுவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. [உ-6]

### பொலீஸ் நிலையத்தில் வைத்து

## போட்டித் தலைவரின் காலை முறித்தார் 'சொத்தி' உபாலி!

கொழும்பு, மே 11

பொலீஸாரின் காவலில் இருந்த—போட்டி மரணப் படையின்—தலைவரான சிந்திகவை ''சொத்தி'' உபாலி நையப் புடைத்து அவரது காலை முறித்துள்ளார்.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் சொத்தி உபாலியின் சூட்டுக்கு இலக்கான சிந்திக சொத்தி உபாலியின் போட்டி மரணப்படையின் தலைவராவார்.

பொலீஸாரால் சிந்திக கைது செய்யப்பட்டு பொலீஸாரின் பாதுகாப்பில் இருந்தபோது பொலீஸ் நிலையத்துக்குச் சென்று கைதிக்கூண்டில் இருந்த சிந்திகவை வெளியே இழுத்து நையப்புடைத்துள்ளார்.

சிந்திகவை பிரபல பொலீஸ் அதிகாரிகள் பிடித்திருக்க சொத்தி உபாலி தமது தாக்குதலை நடத்தியுள்ளார்.

சிந்திகவின் மனைவி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தமது கணவரின் சார்பில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-6)

## குப்பை அள்ளும் அதிகாரமே மாநகர மேயர்களுக்கு!

### மட்டுநகர் முதல்வர் ஆதங்கம்

கொழும்பு, மே 11

''பிரதேச செயலர்களுக்கு உள்ள அதிகாரம் கூட மாநகர முதல்வர்களுக்கு இல்லை. குப்பை அள்ளுவதற்கு மட்டுமே அவர்களுக்கு அதிகாரம் உண்டு''.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் இப்படி தமது ஆதரவாளர்களிடம் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு விமோசனத்தை ஏற்படுத்தி, பெரும் சாதனை படைக்கப் போவதாக நம்பிய இவர்களுக்கு இப்போது தான் அதிகாரம் இல்லை என்பது தெரியவருகிறது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழர்களை தாக்கும் முஸ்லிம் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 11

அம்பாறையில் அகற்றப்பட்ட பொலீஸ் அதிரடிப் படை முகாம்களில் புதிதாக முகாம் அமைத்துள்ள பொலீஸார் தமிழ் மக்கள் மீது கெடுபிடிகளை பிரயோகித்து வருகின்றனர்.

இவர்களின் கெடுபிடிகள் அதிரடிப் படையினரை விட மோசமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ தே. கட்சியின் ஆதரவுடன் அமைச்சர் மன்சூரினால் நியமிக்கப்பட்ட முஸ்லிம் பொலீஸாரே அம்பாறையில் தற்போது அதிகளவில் பணி புரிகின்றனர்.

அன்றாட தேவைகளுக்காகவும், தொழிலின் நிமித்தமும் கல்முனை, மருதானை போன்ற இடங்களுக்குச் செல்லும் தமிழர்கள் வயது வேறுபாடின்றி முஸ்லிம் பொலீஸாரால் தாக்கப் படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நவசமசமாஜ கட்சியும் எதிரணி கூட்டத்தில்!

கொழும்பு. மே 11

எதிர்வரும் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளின் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஒரே பட்டியலில் நவசமசமாஜக்கட்சி போட்டியிடக் கூடும்

இது குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்துவதற்கு தமது கட்சியின் அரசியல் பிரிவு தமக்கு அதிகாரம் வழங்கியுள்ளதாக நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (உ-6)

## ஆளும் ஐக்கிய தேசியகட்சியின் 6 உபசெயலர்களுக்கும் கல்தா!

### புதியவர்களை நயமிக்க டி. பி, முடிவு

கொழும்பு, மே 11

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறு உதவிச் செயலாளர்களையும் உடனடியாகப் பதவி விலகும் படி ஐ. தே. கவின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது கோரிக்கை ஆறு உதவிச் செயலாளர்களுக்கும் எழுத்து மூலமாக அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே தாம் இந்த நடவடிக்கை எடுப்பதாக டாக்டர் விஜேசேகரா தெரிவித்தார்.

கட்சியை மறுசீரமைக்கவும். அதன் உள்ளக நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தவும்—எதிர்வரும் தேர்தல்களுக்கு முகம் கொடுத்து வெற்றியீட்டவும்—

தகுதியாக ஆறு புதியவர்கள் உதவிச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ-6)

## சுவிஸிலுள்ள தமிழருக்கு அந்நாட்டு அரசு கெடுபிடி

கொழும்பு மே 11

சுவிற்சர்லாந்து அரசாங்கம் அங்கு வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு தமது நாட்டை விட்டு வெளியேறுமாறு கடிதங்களை அனுப்பி வருகிறது.

சுவிஸில் தஞ்சம் புகுந்த தமிழர்களுக்கு வெவ்வேறு வகை ஆணைகள் அனுப்பப் படுகின்றன.

சிலருக்கு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறும் —

சிலருக்கு 3 மாதங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் —

சிலருக்கு நாட்டைவிட்டு வெளியேறுவது தொடர்பாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காமினியை எம். பியாக்கும் முயற்சி திரும்பவும் தோல்வி

கொழும்பு, மே 11

காமினி திஸநாயக்காவை தேசியப்பட்டியல் மூலம் எம். பியாக்குவது தொடர்பாக ஐ. தே. கவின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை ஐ தே. கவின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் இது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கலந்து கொண்ட தேசியப்பட்டியல் எம்.பியான காலிங்க ஒபேவன்ஸ காமினி திஸநாயக்காவை எம் பியாக்குவதற்காக தமது பதவியை தாம் இராஜினாமாச் செய்ய முடியாது என்று கட்சிச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா விடம் தெரிவித்து விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஹேமா பிரேமதாஸாவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் பட்சத்தில் மட்டுமே தாம் எம்.பி பதவியை இராஜினாமாச் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 11

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (க-5)

### 'போராளி, ஆதரவாளர் திருமலையில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 11

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் போராளியான மேஜர் தனுஷன் அல்லது குலாமணிச் செல்வன் (முத்துக்குமார் சிவநேசன் திருகோணமலை) ஆதரவாளரான கோணமலை பிரபா ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர் (ஓ-3)

## இவ்வாண்டு தங்கக் கடத்தல் கண்டுபிடிக்கப்படவில்லை!

### சுங்கத் திணைக்களத்தில் மெத்தனப் போக்கு

கொழும்பு' மே 11

இந்த ஆண்டில் தங்கக் கடத்தல் சம்பவம் எதனையும் சுங்கத்திணைக்களம் துப்பறிந்து கண்டுபிடிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வழமைபோன்று நாட்டுக்குள் தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. 1993 இலும் அதற்கு முன்னரும் தங்கம் கடத்தப்படும் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1993 க்கு பின்னர் தங்கக் கடத்தல் சம்பவம் ஒன்று கூட சுங்கத் திணைக்களத்தினரால் கண்டுபிடிக்கப்பட வில்லை.

சுங்கத்திணைக்களத்தில் நிலவும் போக்குக் குறித்து பல சுங்க அதிகாரிகள் வெறுப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் ஒரு சம்பவத்தில் 15 தங்க பிஸ்கட்டுகளை கடத்தியவருக்கு 28 லட்சத்து 85 ஆயிரத்து 850 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பின்னர் அபராதத் தொகை 75 ஆயிரம் ரூபாவாகக்குறைக்கப்பட்டதுடன் கடத்தப்பட்ட தங்கமும் கடத்தியவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இன்னொரு சம்பவத்தில் 42 தங்க பிஸ்கட்டுகளைக் கடத்தியவருக்குவிதிக்கப்பட்ட 26 லட்சத்து 91 ஆயிரத்து 160 ரூபா அபராதம் 2 லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டதுடன் கடத்தப்பட்ட தங்கமும் கடத்தியவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மூன்றாவது சம்பவத்திலும் 92 தங்க பிஸ்கட்டுகளை கடத்தியவருக்கு விதிக்கப்பட்ட 58 லட்சத்து 94 ஆயிரம் ரூபா அபராதம் 5 லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டதுடன் கடத்தப்பட்ட தங்கமும் அந்த நபரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

21 கிலோகிராம் எடையுள்ள 192

[6ஆம் பக்கம் பார்க்க]

### மூச்சந்தி முரளி



குட்டி பட்ஜெட்டோடை ... வரும் பாருங்கோ......!

## டி. பியின் 'குட்டி பட்ஜெட்டுக்கு' மேலும் ரூ. 2,000 கோடி தேவை

### நிதியைப் பெறுவது எப்படி என அதிகாரிகள் கேள்வி

கொழும்பு, மே 11

ஜனாதிபதி விஜேதுங்க மே தினத்தன்று அறிவித்த 'குட்டி பட்ஜெட்' நிவாரணத் திட்டங்களை செயல்படுத்த அரசுக்கு 2 ஆயிரம் கோடி ரூபா மேலதிகமாகத் தேவைப்படுவதாக பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொகைக்குள்—

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்த புதிதாக ஆயுதங்கள் வாங்குவதற்குத் தேவைப்படும் மேலதிகமான 600 கோடி ரூபாவும் அடங்குகின்றது என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

ஜனாதிபதியின் 'குட்டி பட்ஜெட்டுக்கு பின்னால் மூளையாக இருந்து செயற் பட்டவர் திறைசேரியின் பிரதிச் செயலாளர் கே. சண்முகலிங்கம் என்றும்—

வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ள திறைசேரிச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அல்ல என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மேதினம் அன்று நிவாரணத் திட்டங்களை அறிவித்த மறுநாளே, உயர்நிலை அரச அதிகாரிகள், 'குட்டி பட்ஜெட்டை அமுல் செய்வதற்குத் தேவையான பணம் எங்கேயிருந்து வரும்? எப்படிப் பெறப்போகின்றோம்? — என்று கூறி அங்கலாய்த்தார்களாம்

''சண்டே ரைம்ஸ்' இத்தகவலை வெளியிட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பரி யோவான் கல்லூரி
## B2 விஞ்ஞான ஒன்றியத்தின்
யாழ். ரமணனின் ராஜன்ஸ் இசையில்

## "இன்னிசை மாலை"

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இடம்:- யாழ். பரியோவான் கல்லூரி பீற்றோ மண்டபம்,
காலம்:- 11-05-94 இன்று புதன்கிழமை
நேரம்:- பி. ப. 3.00 மணி
அன்டளிப்பு:- 100/- 50/- 25/-



**லாவண்யா**
யாழ்ப்பாணம்
**V.T & சன்ஸ்**
சுன்னாகம்
யாழ்ப்பாணம்.

(சி/8127)



## 'உதயன்' வெற்றிக் கிண்ணத்துக்காக
## பருத்தித்துறை ஐ. வி. க. நடத்தும் மூன்றாவது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி-1994

"உதயன்" நிறுவனத்தின் ஆதரவில் 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:
**15 – 05 – 1994** ஞாயிற்றுக்கிழமை

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
1) செயலாளர், பருத்தித்துறை ஐ.வி. க, பருத்தித்துறை;
2) "உதயன்" விளம்பரப் பணிமனை, 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## யாழ். குடாநாட்டிலிருந்து விரைவில் வெளிவரவிருக்கும் விளையாட்டுத்துறை செய்தி
# வார இதழுக்கு
## பிரதேச செய்தியாளர்கள் தேவை

விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இளைஞர்களுக்கு முன்னுரிமையும் பயிற்சியும் வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மூலம் 01-06-94 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல, 937,
மே/பா, உதயன்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8084)



# YOGI'S CAKE AND SUGAR CRAFT EXHIBITION
## கேக், சீனிமலர் அலங்காரக் கண்காட்சி

காலம்: **20-5-94** வெள்ளி தொடக்கம் **24-5-94** வரை.
நேரம்: மு. ப. 9 மணி முதல் பி. ப. 6 மணி வரை

ஆரம்பித்து வைப்பவர்:
உயர்திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள்
(அரச அதிபர் யாழ்ப்பாணம்)

ஆதரவு நல்குபவர்கள்:-
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
யோகி ஹோம்சயன்ஸ் அக்கடமி
**YOGI HOME SCIENCE ACADEMY**
71, B. NAYANMAR VEETHY,
NALLUR — JAFFNA.

(சி-8128)


## பாடசாலைகளில்

வேலணை சைவப் பிரகாச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. பொ. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும். (ஒ)

* * *

வரணி ஸ்தான அமெரிக்கன் மிஷன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதிபுஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

## உத்தரவு பெறாமல் வெளிநாடு சென்ற
# மேயரிடம் விளக்கம் கேட்கிறார் ஜனாதிபதி
## 14 தினங்கள் காலக்கெடு விதிப்பு

கொழும்பு, மே 11

ஜனாதிபதி விஜேதுங்காவின் அனுமதி பெறாமல் வெளிநாடு சென்று திருப்பிய தென்பகுதியைச் சேர்ந்த மாநகர சபை மேயர் ஒருவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

பதினான்கு தினங்களுக்குள் விளக்கம் தரும்படி அவருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்கள், அரச எம். பிக்கள், உள்ளூராட்சித் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் வெளிநாடு செல்வதற்கு முன்பதாக ஜனாதிபதியிடம் அனுமதி பெற வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. [ஓ-எ]

## மாஹோ அம்பன் பொலவில்
# பிரேமாவுக்கு சிலை அமைக்க குடும்பத்தினர் முடிவு!

கொழும்பு, மே 11

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிலை ஒன்றை, அவருக்குச் சொந்தமான, மாஹோவில் உள்ள அம்பன் பொலவலவில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பிரேமாவின் குடும்ப உறுப்பினர்களே இச்சிலையை நிறுவ உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பன்பொலவில் நிறுவப்படும் சிலையின் அடியில் பிரேமதாஸவின் அஸ்தியும் அடக்கம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

# பிரேமாவின் ஹல்ஸ்டோர்ப் சிலை ரூ. 25 லட்சம் பெறுமதி
## வீண் விரயம் என்கிறார்கள் குடும்பத்தினர்

கொழும்பு, மே 11

கடந்த மேதினம் அன்று ஹல்ஸ்டோர்ப்பில் திரைநீக்கம் செய்யப்பட்ட பிரேமாவின் சிலை, அவரை போன்று தோற்றமளிக்கவில்லை என அவரது குடும்பத்தினர் குறை கூறி வருகின்றனர்.

பிரேமதாஸா மேடைப் பேச்சுக்களை நிகழ்த்தும் போது தனது வலது கையை உயர்த்தியே பேசிவந்தார்.

ஆனால் ஹல்ஸ்டோர்பில் நிறுவப்பட்ட சிலை, இடது கையை உயர்த்திப் பேசுவது போன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் குடும்ப உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சிலையைச் செய்ய செலவிடப்பட்ட 25 லட்சம் ரூபா பணம் வீண் விரயம் என்று பிரேமா குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ-எ)

## கொழும்பில் கணக்காளர் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 11

கணக்காளருக்கான விசைத் திறமையான தடைப் பரீட்சை எதிர்வரும் 28ம் திகதி கொழும்பில் நடைபெறும் என்றும், அப்பரீட்சைக்கான அனுமதி அட்டையை பரீட்சைத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளும்படியும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## ஆலயங்களில்

மல்லாகம் வில்வராயன் சீமா முத்துமாரி அம்மன் கோயிலில் சங்காபிஷேகமும் அன்னதானமும் இன்று நடைபெறும்.

மாலை 5 மணிக்கு மயிலங்கூடலூர் சி. அப்புத்துரை எழுதிய "ஆலய வரலாறும் திருவூஞ்சலும்" எனும் நூலின் வெளியீடும் இடம்பெறும். (க)

# மீன் வியாபாரத்தை ஊக்குவிக்க நடவடிக்கை
## வல்வை, மீனவருக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், மே 11

வல்வெட்டித்துறை வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் மீன் வியாபாரத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் 22 மீனவக் குடும்பங்களுக்கு மொத்தமாக ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியினரால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்கு தலா 5,000/- ரூபா வீதம் இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன் வியாபாரத்தை மேற்கொள்ளவென மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இவ்வாறான உதவிகள் மூலம் பல மீனவக் குடும்பங்கள் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்
## பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்:- 25 - 05 - 1994 புதன்கிழமை
நேரம்:- காலை 9.30 மணி
இடம்:- பாடசாலை மண்டபம்

இப்பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுடைய பழைய மாணவர்கள் அனைவரையும் சமூகந்தருப்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். உறுப்புரிமை படிவங்களைப் பாடசாலையில் பெற்றுக் கொள்ளவும்.

ந. ஜெயகுமாரன்
செயலாளர்

வயாவிளான் ம. ம. வி,
உரும்பிராய்.

(7091)


## ஆண்டு விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்த விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆண்டு விழா நிலைய முன்மைதானத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு திரு. பூ. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பேச்சு, சங்கீதம், நடனம், பட்டிமன்றம், வில்லிசை, நாடகங்கள், கரகாட்டம் ஆகியனவும் இடம்பெறும். (க)

## இன்று

யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஆடவி கவிதை நூல் அறிமுகம் நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஙர்த்தக முகாமைத்துவ மண்டபத்தில் செல்வி. ஸ்ரீ கௌரி தலைமையில் நடைபெறும் (ஓ-30)


கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ அற்புத நர்த்த விநாயகர்
## சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும்
# ஆண்டு விழா

இடம் : நிலைய முன் மைதானம்
காலம் : இன்று 11 - 05 - 94 புதன்கிழமை மாலை 5 மணி

பிரதம விருந்தினர்: திரு. இ. இளங்கோ, நல்லூர் பி. உ. செயலர்
சிறப்பு விருந்தினர்: திரு. இளையவன், த. ஈ. வி. பு. உ. அ. துறை பொறுப்பாளர், யாழ் மாவட்டம்

பேச்சு, சங்கீதம், நடனம், பட்டிமன்றம், வில்லிசை, நாடகங்கள், கரக ஆட்டம் நடைபெறும்

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பூ. க. இராசரத்தினம், தலைவர்
து. சிவகுமாரன், செயலாளர்

(30833)



# கண்ணீர் அஞ்சலி
## அமரர் வே. சுந்தரலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளரும் யாழ். மாவட்ட நிறைவேற்று பொறியியலாளருமான திரு. ஐ. சுந்தரகுமார் அவர்களின் தந்தையார் அமரர் வே. சுந்தரலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

குறிப்பு:- அன்னாரின் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள அவரது இல்லத்தில் இன்று (11-5-94) புதன் காலை 10 மணிக்கு நடைபெறும்.

நிர்மாணத் திணைக்கள ஊழியர்கள்
[illegible]

(30832)



## PERSONAL NEW SCIENCE CENTRE
JAFFNA.

# 96 A/L
## புதியபிரிவு
[திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி]

## ஆரம்பம்:
## 12-05-1994
வியாழன் 4 P. M.

விலங்கியல்
திரு R. ஈஸ்வரதாசன்
B.Sc. (Cey) Dip. in Ed.

பௌதிகவியல்
திரு. ரவீந்திரநாதன்
B.Sc. (Cey) Dip in Ed.

[சி/8125]



## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர் சங்க
யாழ். கிளையின்
# வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 14 – 05 – 1994 காலை 10 மணி
இடம்: இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகத்தின் கீழ் மாடி
விடயம்: புதிய நிர்வாகஸ்தர் தெரிவும் வேறு விடயங்களும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலகத்தினதும் வவுனியா கிளை அலுவலகத்தினதும், வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முக்கிய குறிப்பு:
மதிய போசனத்தில் பங்கு கொள்வோர் 13-05-94க்கு முன்பு செயலாளரிடம் அல்லது தலைவரிடம் பதிவு செய்து கொள்ளவும்.

வி. பி. தியாகராசா, தலைவர், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.
ச. சண்முகராஜா, செயலாளர், 167/1, கோவில் வீதி, நல்லூர்.

[30831]



# கலை வர்த்தக கல்லூரி
# C . C . A
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## G C E A/L 96
## புதியபிரிவு ஆரம்பம் 14-05-94
சனிக்கிழமை காலை 7.00 மணி

ஆசிரியர் குழு
[பட்டப்படிப்புக்களை மேற்கொண்ட எமது வழமையான ஆசிரியர்குழு]

## மாணவர்கள் கவனத்துக்கு

சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரையும் வகுப்புகள் நடைபெறும் ஒரே நிறுவனம்.

எமது நிறுவன விளம்பரம் எமது நிறுவனத்தில் படித்த மாணவர்களினதும், படிக்கின்ற மாணவர்களினதும் எண்ணிக்கையும் வர்கள் பெற்ற அதிவிசேட சித்தியுமே.

மாணவர்களின் வேண்டுதலுக்கு இணங்க புதிய பிரிவுக்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

[சி/8087] நிர்வாகி



# கண்ணீர் அஞ்சலி
## தில்லையம்பலம் இரத்தினம்
(பாலசிங்கம்)

வேலணை கிழக்கு தவிடுதின்னிப் பிள்ளையார் பரிபாலன சபையின் போசகராக நீண்டகாலம் சேவையாற்றி ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி 9-5-94 இல் கனடாவில் காலமான அமரர் தில்லையம்பலம் இரத்தினம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

வேலணை கிழக்கு
தவிடுதின்னிப்பிள்ளையார் ஆலய
பரிபாலனசபை

வேலணை. [30839]



# இதய அஞ்சலி
## அமரர் தில்லையம்பலம் இரத்தினம்
(பாலசிங்கம்)

வேலணை கிழக்கின் பிரபல சமய, சமூகசேவையாளரும், அம்பாளின் திருத்தொண்டரும், அன்னதான மடத்தின் ஸ்தாபகரும், திருத்தொண்டர் தில்லையம்பலம் - செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், 9 – 5 – 94 இல் கனடாவில் காலஞ்சென்றவருமாகிய பெரியார் அமரர் தி. இரத்தினம் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகள். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பழைய மாணவர் சங்கம்,
வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்

வேலணை. (30837)



# கண்ணீர் அஞ்சலி
## தி. இரத்தினம் (பாலசிங்கம்)

வேலணை கிழக்கு திருத்தொண்டர் அமரர் தில்லையம்பலத்தின் சிரேஷ்ட புதல்வரும், நீண்டகாலம் பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் முகாமையாளரும், தில்லையம்பலம் - செல்லமுத்து ஞாபகார்த்த அன்னதான மடத்தின் ஸ்தாபகரும், கனடாவில் காலமாகியவருமான அமரர் தி. இரத்தினம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் ஆன்மா அம்பிகை அடியிணைச்சேர பிரார்த்திக்கின்றோம்.

வேலணை பெருங்குளம்
முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
பரிபாலனசபை

வேலணை. (30838)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களில் இயங்கும் சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கடந்த 30 ஆம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வடக்கு-கிழக்கு மாகாண ஆயுர்வேதப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ. உரோ மகேஸ்வரன் உட்பட சித்த வைத்திய அதிகாரிகளும் அரசாங்க உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். சித்த வைத்தியத்துறையின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி இக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் வைத்திய கலாநிதி இ. சுகலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார். (க)

## வரவேற்பு விழா

சந்நிதி - ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில், குருபீடாதிபதி, ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் தலைமையில், மெய்கண்டதேவர் ஆதீனம், குருதொண்டு செய் முதல்வர், சிவத்திரு சித்தாந்தசரபசிவம் அவர்களுக்கு சமீபத்தில் சிறப்பான வரவேற்பு விழா நடத்தப்பட்டது.

இதில், பிரம்மஸ்ரீ சி. வெங்கடேஸ்வரசர்மா, சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தர் குருக்கள் (கரணவாய் - வேலணை ஆதீனம்) ஆகியோர் வாழ்த்துரையும், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் சிறப்புரையும் வழங்கினர்.

குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள், சிவசின்னங்கள் அளித்துக் கௌரவித்தார். (இ)

## எள்ளு அமோக விளைச்சல்

அராலி, மே 11

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலி வடக்கு, கோட்டை, தொல்புரம், சுழிபுரம், மூளாய் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள எள்ளுப் பயிர் அமோக விளைவைக் கொடுத்துள்ளது. இப்பகுதிகளில் 480 ஹெக்டர் பரப்பில் எள் பயிர் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை 40 ஹெக்டர் பரப்பில் பயிர் செய்யப்பட்ட பாசிப்பயறு, கௌபி போன்றவை ஒருவகை நோய் ஏற்பட்டு விளைவு எதுவும் இன்றி காணப்படுகின்றன.

இப்பகுதிகளில் பயிர்செய்யப்பட்ட மிளகாயும் நோயால் தாக்கப்பட்டு தோட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

பயிர்கள் பாதிக்கப்பட்ட பலர்களில் நிலக்கடலை செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். (ஒ-12)

## நிறைவு விழா

வட. இலங்கைச் சர்வோதயத்தின் சிறுவர் கோட்ட 5 ஆம் ஆண்டு நிறைவு விழா மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலை அதிபர் திரு. சி. கே. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையை மேற்படி நிலையத்தின் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. சி. சதாசிவம் நிகழ்த்தினார். தென்மராட்சி மேற்கு இணைப்பாளர் திருமதி லீலா துரைராசா சிறப்புரை நிகழ்த்தினார். (ஸ)

## நிவாரணம் வழங்கல்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தொழில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 24 மீனவக் குடும்பங்களுக்கு பிரதேச செயலரின் உத்தரவின் மீது கடந்த ஜனவரி மாதத்தின் கடைசி இரு வாரங்களுக்குமான நிவாரணப் பொருள்களைச் சங்கானை பலநோக்குச் கூட்டுறவுச்சங்கம் வழங்கி வருகின்றது. (எ-12)

## சுத்திகரிப்புக்கு மேலும் 30 கை வண்டிகள்!

கோண்டாவில், மே 11

யாழ். மாநகரசபையின் சுகாதார பகுதியின் சுத்திகரிப்பு பணிக்கு மேலும் 30 கைவண்டிகளை பாவனைக்கு உட்படுத்தப் போவதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது 20 க்கு மேற்பட்ட கைவண்டிகள் மூலம் சுத்திகரிப்பு பணிகளை மாநகரசபை மேற்கொண்டு வருகின்றது. (ஒ-85)

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில்

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் அங்கேயே வாக்களிக்கும் புதிய திட்டம்

## அமுல் செய்வதற்கு முயற்சி

கொழும்பு, மே 11

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர் அந்தந்த நாடுகளிலேயே வாக்களிக்கக் கூடியதான திட்டம் ஒன்றை தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு தயாரித்து வருகிறது.

இத்திட்டம் அரசிடமும் தேர்தல் திணைக்களத்திடமும் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் உள்ள இலங்கையரைச் சந்தித்து விட்டு திரும்பிய அமைச்சுத் தூதுக் குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாக வைத்தே இத்திட்டம் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்றும்—

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் இது செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் வாக்காளர்களில் 5 சதவீதமானோர் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர். இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் சுமார் 5 லட்சம் தொழிலாளர்களும் தாம் பணிபுரியும் நாடுகளில் இருந்த படி வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

உள்நாட்டுப் போர் நடக்கும்

# யேமனிலிருந்து இலங்கையர் அழைத்து வரப்படுவர்!

யேமன் நாட்டிலுள்ள இலங்கையர்களைத் திருப்பி அழைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என வெளிநாட்டு அமைச்சு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

உள்நாட்டுப் போர் காரணமாக யேமனில் வசிக்கும் 500 இலங்கையர்கள் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர்.

யேமனிலிருந்து வெளியேற விரும்பும் இலங்கையர்களை அங்கிருந்து அழைத்து வருவதற்கு ஏனைய நாடுகளுடன் சேர்ந்து அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. (ஐ-க)

ஜேர்மனியில் தமிழர் நடத்தும்

# ரி. வி. ஒளிபரப்பை நிறுத்த இலங்கை கோரவில்லை

## கொழும்பில் தூதரக அதிகாரி தகவல்

கொழும்பு, மே 11

ஜேர்மனியில் இலங்கைத் தமிழர் நடத்தும் தொலைக்காட்சி ஒளிபரப்புச்சேவையை முடிவிடும்படி இலங்கை அரசாங்கம் ஜேர்மன் அரசைக் கேட்கவில்லை.

கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரக அதிகாரி ஒருவர் இத் தகவலை வெளியிட்டார்.

தொலைக்காட்சி நிலையங்கள் நடத்துவதற்கான அனுமதி வழங்குவது மாநில அரசுக்குட்பட்ட விஷயமாகும். ஆகவே மாநில அரசின் விவகாரங்களில் சமஷ்டி அரசு தலையிட முடியாது.

எப்படியாயினும், அரசியல் பிரசாரத்துக்கு தொலைக்காட்சி நிலையங்கள் பயன்படுத்தப்படும்போது மட்டும் சமஷ்டி அரசாங்கம் தலையிட முடியும். கலாசார மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுமானால் ஒன்றுமே எம்மால் செய்ய முடியாது —என்று அந்த அதிகாரி கூறினார்.

"தீவிரவாத நடவடிக்கைகளுக்கு தளமாக எமது பிரதேசம் பாவிக்கப்பட அனுமதியோம்" —என்றும் அவர் கூறினார்.

இலங்கை வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்னா இது தொடர்பாக ஜேர்மனி செல்வது பற்றி தமக்கு தகவல் கிடைக்கவில்லை. என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை—திரு திலகரத்னா போன் செல்வது தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொலைப் பயமுறுத்தல் இருந்தும்

# எனக்கு பாதுகாப்பு வழங்க அரசு தவறி விட்டது!

## சாடுகிறார் சந்திரிகா

கொழும்பு, மே 11

கொலைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியில் வாழும் தமக்கு போதிய பாதுகாப்பு வழங்க அரசு தவறியுள்ளதாக மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமைச்சரவை உறுப்பினருக்கு வழங்கப்படும் பாதுகாப்புக் கூட தமக்கு அரசு வழங்காதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதிக்கு இது விஷயம் தெரியும். பொலிஸ்மா அதிபருக்கும் இது விஷயத்தை அறிவித்துள்ளேன். அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாதுகாப்பின்றி வாழ அரசு என்னை விட்டு வைத்துள்ளது" — என்றும் அவர் சொன்னார். [ஒ-எ]

# டி.பியின் ஆலோசகராக வீரசூரியா பதவி ஏற்பார்!

கொழும்பு, மே 11

ஜனாதிபதி விஜேதுங்காவின் அபிவிருத்தி மற்றும் அரசியல் விவகார ஆலோசகராக டாக்டர் விக்கிரம வீரசூரியா பதவி ஏற்கவிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று புதன் அவர் வெளிநாட்டில் இருந்து கொழும்பு திரும்புகிறார்.

எதிர்வரும் தேர்தல்களில் அவர் முக்கிய பங்கு வகிக்க இருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் வீரசூரியா காமினி திசாநாயக்காவின் முக்கிய உறவினர் ஆவார். இவர் திட்டமிடல் கொள்கை வகுப்பு அமைச்சின் செயலாளராக முன்னர் பதவி வகித்துள்ளார்.

சிறிசேன கூரேயின் விசுவாசியான

# லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் ராஜினாமா செய்தது ஏன்?

## விபத்துச் செய்தியே காரணமாம்

கொழும்பு, மே 11

அஹங்கம என்னும் இடத்தில் ரயில் — பாடசாலை பஸ் மோதிய சம்பவத்தை 'டெய்லி நியூஸ்' பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்தது தான் லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் பதவியில் இருந்து சுனில் ரொட்ரிகோவை விலக வைத்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

ரயில் - பஸ் மோதல் சம்பவத்தைத் தவிரவேறு நல்ல செய்திகளைப் பிரசுரித்திருக்க முடியாதா என்று ஜனாதிபதி விஜேதுங்க சுனில் ரொட்ரிகோவை கேட்டதாகவும் —

"எங்களால் எதிர்க்கட்சிகள் பற்றிய செய்திகளை வெளியிட முடியாதுள்ளது. குறைந்த பட்சம் இயற்கை அழிவுகள் பற்றிய செய்திகளையாவது முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கும் சுதந்திரம் எங்களுக்கு இருக்க வேண்டும்'— என்று ரொட்ரிகோ ஜனாதிபதிக்குத் தெரிவிக்க நேர்ந்தது.

ஓராண்டு காலமாக இருவருக்கும் இடையே தகராறு இருந்து வந்தது. சனத் அமரதுங்க எழுதி லங்கா கார்டியனில் பிரசுரம் செய்த கட்டுரை ஒன்றை சண்டே ஒப்சேவர் மறுபிரசுரம் செய்தது தகராறை பெரிதாக்கியது. இந்த நிலையில் ரயில் - பஸ் விபத்து நிலவரத்தைச் சிக்கலாக்கியது.

முடிவில் சிறிசேன கூரேயின் விசுவாசியாகக் கருதப்படும் ரொட்ரிகோ பதவியை ராஜினாமாச் செய்தார். (ஒ-எ)

காமினி, தொண்டாவுக்கு எதிரான

# மத்திய மாகாண முதல்வருக்கு சப்ரகமுவ ஆளுநர் பதவி?

கொழும்பு மே 11

மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யு. பி. பி திஸநாயக்கா சப்ரகமுவ ஆளுநராக நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

சப்ரகமுவ ஆளுநராக இருந்த நோயல் விமலசேன அண்மையில் காலமானதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு இவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது மத்திய மாகாண அமைச்சராக இருக்கும் லக்கி ஜெயவர்த்தன அல்லது ஆளும் கட்சி உறுப்பினரான காமினி ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்கள் முதலமைச்சர் பதவிக்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் காமினி ராஜபக்ஷாவுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மாற்றத்துடன் மாகாண அமைச்சர்களிலும் மாற்றம் செய்யப்படலாம் என்று தெரிகிறது.

தற்போது முதலமைச்சராக இருக்கும் திரு டபிள்யு பி. பி. திஸநாயக்காவுக்கு எதிராக கடந்த ஆண்டு காமினி திஸநாயக்காவும் அமைச்சர் தொண்டமானும் சேர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தது தெரிந்ததே.

செல்லச்சாமியின் ஆதரவாளர்களான இ. தொ. கா. உறுப்பினர்களின் ஆதரவு முதலமைச்சருக்கு அப்போது இருந்ததால் அப்பிரேரணை விவாதத்துக்கே எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இப்போது காமினி திஸநாயக்கா ஜனாதிபதியின் முக்கிய ஆலோசகராக இருக்கிறார். தொண்டமானுடனான உறவை ஜனாதிபதி இப்போது சீர்ப்படுத்திக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-எ)

# புலிகளுடன் தேர்தல் கால சமரசம் ஏற்படுத்தும் நோக்கம் இல்லை

## வடக்கில் பெரும் தாக்குதலுக்கு முன் சூன்ய அமைதி

கொழும்பு, மே 11

கிழக்கில் இருந்து வடக்கை நோக்கி படை நகர்த்தல்கள் பூர்த்தி அடைந்துவிட்டன. வடக்கு போர் முனைக்கு அத்தியாவசியமான உடனடித் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் தாக்குதல் நடவடிக்கையில் பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழப்போவதில்லை. இரண்டு முக்கிய தேர்தல்களை நாடு எதிர் நோக்கியுள்ள இவ்வேளையில் புலிகளுடன் ஒரு தேர்தல் கால சமரசத்தை அரசு ஏற்படுத்திக் கொள்ளும் என்ற எதிர்பார்ப்புக்களை அரசு புறம் தள்ளி உள்ளது. புயலுக்கு முன்னர் நிலவும் அமைதி போன்ற அமைதியே தற்போது வடபகுதியில் நிலவுகிறது.

கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றில் வெளியாகி உள்ள ரசியல் கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணசபைத் தேர்தலின் ஆளும் கட்சி அடைந்த தோல்வியை அடுத்து கொழும்பு அரசியல் நிலைமைகள் மாறான போக்கைக் கொண்டிருப்பதாகவும் —

இந்தத் தோல்வி காரணமாக ஆளும்கட்சிக்குள் வெடித்துள்ள பூசல்களால் தாக்குதலுக்கான இறுதி உத்தரவைப் பிறப்பிக்க முடியாத நிலை அரசாங்கத்தின் பாதுகாப்பு தலைமைகளுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அவதானிகள் கருதுகின்றனர்.

அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதா[illegible]களுக்கு முன்னர் [illegible] அரசாங்கத்துக்கு [illegible]தனர்.

இந்த தகவல் முதுநிலை தமிழ் அரசாங்க அதிகாரி ஒருவர் மூலமாக பிரதமருக்கு நேரடியாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருவதாக பிரதமர் உறுதி அளித்தார்.

ஆனால் இதற்கு சாதகமான பதில் எதுவும் அரச தரப்பில் இருந்து வெளிவரவில்லை.

புலிகளுடனான பேச்சுவார்த்தை விடயத்தில், முன் நிபந்தனையுடன் கூடிய பழைய நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் இல்லை என்பதையே புலிகளின் இந்த சமாதான சமிக்ஞைகளுக்குப் பதிலாக [illegible] காட்டுகிறது.

சமாதானத்துக்கான சமிக்ஞையை அரசாங்கம் ஆர்வத்தோடு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளாத நிலையும் ஜனாதிபதி விஜேதுங்காவின் இனப்பிரச்சினை விடயத்திலான கடும் போக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளன.

பாரிய ராணுவ நடவடிக்கையோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கையோ எதுவாக இருந்தாலும் இப்போதைய நிலைமையில் யாழ். குடாநாடு மீதான தாக்குதல் பாரிய உயிரிழப்புகளுக்கே வழிவகுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# எனக்கு வைத்த பொறியில் சிக்கியிருக்கும் சதிகாரர்கள்!

## ரணசிங்க கூறும் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 11

"எனக்கு எதிராகச் சதி செய்தவர்கள் எனக்கு வைத்த பொறிக்குள்ளே இப்போது மாட்டிக் கொண்டுள்ளனர்"—

ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா பிரேமதாஸா நினைவு தினக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"நான் ஜனாதிபதி விஜேதுங்காவை மணம் வீசும் மலர் என்று பாராட்டியதை சிலர் தவறாகப் புரிந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை நான் கண்டிப்பதாகக் கூறினர். ஒருமுறை என் உயிரையே பிரேமா காப்பாற்றினார். அப்படியானவரை நான் கண்டிப்பேனா? அப்படி நான் கண்டித்துப் பேசியிருந்தால் என்னை இப்பதவியில் இருந்து அல்ல, இந்த உலகத்தில் இருந்தே அகற்றிவிட வேண்டும்.

"பத்திரிகைகள் எனக்கு தரும் முக்கியத்துவத்தினால் நான் இன்று அமைதியாகக் குளிக்கக்கூட முடியாத நிலையில் உள்ளேன்" — என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

லலித் அத்துலத்முதலி படுகொலை:

# ஜனாதிபதி ஆணைக் குழு நியமிப்பதற்கு முடிவு?

## டி. பி., ரணிலின் பரிசீலனையில்

கொழும்பு, மே 11

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது குறித்து ஜனாதிபதி விஜேதுங்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"பெரும்பாலும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும்" என்று ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்தார்.

"ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்வதே எம்முன்னால் உள்ள அவசர பணியாகும். நாம் அவர்களுடன் பேசுவோம். இந்த இணைப்புக்குப் பிரதான தடையாக இருப்பது அத்துலத் முதலி கொலை தொடர்பான விசாரணைக் குழுவை நியமிப்பதே" — என்றும் அவர் கூறினார்.

எம்பிலிப்பிட்டிய பயங்கரம்:

# 31 மாணவர்கள் கொலை; விரைவில்சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே 11

1989 கலவர காலத்தில் தென்பகுதி, எம்பிலிப்பிட்டியவில் 31 பாடசாலை மாணவர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

"காணாமற்போன மாணவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். யார் இம் மாணவர்களைக் கூட்டிச் சென்றனர் என்பதற்கு சாட்சியங்கள் உண்டு. யார் அவர்களைக் கொன்றார்கள் என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்" — என்று சட்டமா அதிபர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

கிடைக்கப்பட்ட சாட்சியங்களின்படி கடத்தப்பட்ட மாணவர்கள் சூரியகந்தவில் 25 மைல் தொலைவில் உள்ள தேக்கு மரக் காட்டில் (தேக்காகெல) எரிக்கப்பட்டனர் என்பதற்கும் சாட்சியங்கள் கிடைத்துள்ளன.

ஆகவே சூரியகந்தாவில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளுக்கும் எம்பிலிப்பிட்டிய மாணவர் கொலைகளுக்கும் தொடர்புகள் கிடையாது என்றும் சட்டமா அதிபர் கூறினார். (ஒ-எ)

# கர்நாடக இசை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மே 11

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் கர்நாடக இசை ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சி. ஈ. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ், கணிதத்தில் சாதாரண சித்தியுடன் சங்கீதத்தில் திறமைச் சித்தி உள்ளவர்களும்—

அரசாங்க நுண்கலைக் கல்லூரி அரசாங்க இசை நடனக் கல்லூரியில் கர்நாடக இசை சம்பந்தமாக 4/5/6 வருட இறுதிச் சான்றிதழ் பெற்றோரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

18வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

இது சம்பந்தமாக 15-04-94 வர்த்தமானி அறிவித்தலை யாழ் செயலக கச்சேரியக் கிளையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் (ஒ-162)

## புலிகளின் குரல் வானொலியில்

11 – 05 – 1994

புதன் இரவு

- ★ 8-01 — குயிலோசை— "சுரண்டல்களைச் சுட்டெரிப்போம்" கிராமிய நிகழ்வு
- ★ 8-20 — ஏர்முனை — "எண்ணெய்ப் பயிராக முந்தாமணக்கு"
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8 40 — நாடகம் "விளைவு"

12 – 05 – 1994

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்களின் தொடர்ச்சி.

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், மே 11

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களை இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு தண்ணீருடன் அன்றையதினம் மதியம் 12 00 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர். கேட்டுள்ளார். (ஒ)

## காய்ச்சலுக்கு 5, 027.பேர் சிகிச்சை

தென்மராட்சி, மே 11

இவ்வருடத்தின் முதல் நூறு நாட்களில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 5ஆயிரத்து 27பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து602 பேர் மலேரியா காய்ச்சலினாலும்33பேர் மூளை மலேரியாவினாலும் இருவர் கலப்பு மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்! (ரு 117)

**கூட்டும் குப்பை சேர்த்திடு– அதை கட்டுப் பணமாய் பார்த்திடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

தேவை

அரச அதிகாரமுடைய சான்றிதழுள்ள மருந்தாளர் [Pharmacist] தேவை. 20-5-94திற்கு முன் விண்ணப்பிக்கவும். 632, மே/பா உதயன். (30529)

பறிமுதல் செய்து அறிப்பு!

தென்மராட்சி, மே 11 பாவனைக்கு உதவாத 21 கிலோ இறைச்சி வற்றல் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. சுடந்த சனிக்கிழமைசாவகச்சேரியில் சுகாதாரப் பகுதியினர் இந் நடவடிக்கையை மேற்கொண்டனர். (ஒ117-31)

---

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

**ஆரம்பம்: 15 - 05 - 1994**

8-30 மணி

Lectures By:

S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M (London)

- ★ முதல் அறிமுக வகுப்பு இலவசம்
- ★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/- மட்டுமே.
- ★ BASIC கற்கும் மாணவர்களுக்கு Lotus Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை.
- ★ அச்சடித்த பாடக் குறிப்பு.
- ★ கூடிய செய்முறைப் பயிற்சிகள்.
- ★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

[Pioneers in Computer Education]

16, 3rd, CROSS STREET, JAFFNA.

(சி-8121)

---

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

நடத்தும்

## பெண்களுக்கான தட்டச்சு இயந்திரம் திருத்தல் பயிற்சி நெறி

தகைமை: 1. க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. தட்டச்சு பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

காலம்: 03 மாதம்

இடம்: 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 14-05-94 (சனி) காலை 9-00 மணிக்கு றி.ஆர்.ஆர்.ஒ காரியாலயத்திற்கு கல்விச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

குறிப்பு: இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
(றி. ஆர். ஆர். ஒ. லிமிட்டெட்),
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-8116)

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 96 கலை, வர்த்தகம்

### புதிய பிரிவு

- ✻ பிரிவு **1?** இல்லை
- ✻ பிரிவு **2?** இல்லையில்லை
- ✻ பிரிவு **3?** இல்லவேயில்லை
- ✻ பிரிவு **4?** ஆம்

மாணவன்:- வேறு புதிய பிரிவு ஆரம்பிப்பீர்களா?

நிர்வாகி:- எனக்கு விருப்பம்தான், ஆனால் எமது ஆசிரியர்களுக்கு நேரம் இல்லையே எனவே இதுவே இறுதிப் பிரிவு.

**ஆரம்பம்: 14 - 05 - 1994**

சனிக்கிழமை 7 00 a. m.

(சி-8085)

---

## மனைப் பொருளியலும் கைத்திறனும்

மகளிருக்கான

## டிப்ளோமா பயிற்சி நெறி

- ○ கேக் ஐசிங்
- ○ உணவு தயாரித்தல்
- ○ உடை தயாரித்தல்
- ○ கை வேலை
- ○ பூ வேலை

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள்**

- ★ மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.
- ★ பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
- ★ கிழமை நாள் பிரிவினருக்கான பயிற்சி திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை நடைபெறும்.
- ★ சனி, ஞாயிறு பிரிவினருக்கான பயிற்சிகள் காலை 9 00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை நடைபெறும்.

மேலும் விவரங்களுக்கு நேரில் வரவும்;

**புதிய கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: 16-05-94**
**புதிய சனி- ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 21-05-94**

## கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)

விக்டோரியா வீதி, யாழ். நகர்.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

(சி-8122)

---

## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. விண்ணப்பங்கள் யாவும் 25-05-94க்கு முன்னர் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

தொடர்பு:
641 மே/பா உதயன்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[30818]

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்கள விலை மதிப்பீட்டுப் பரிசோதகர்
திரு பா. பாலேந்திரன்
அவர்களின் தந்தையார்

**அமரர் க. பாலசுந்தரம்**

(இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர்)

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்கள ஊழியர்களும், நலன்புரிச் சங்கமும்.

கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[30828]

---

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 – 02 – 1918 | 08 – 05 – 1986 |

**நாகமணி புவிராஜசிங்கம்**

(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

திதி: 11 – 05 – 1994

ஆண்டு எட்டு ஆகியும் - என்றும்
உம்மை மறவாது துடிக்கின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சேனாதிராஜ முதலியார் வீதி,
தம்பாளை,
அச்சுவேலி.

(30824)

---

## கண்ணீர் அஞ்சலி

நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளரும் நிறைவேற்று பொறியியலாளருமான
திரு. சு. சுந்தரகுமார்
அவர்களின் தந்தையார்

**அமரர் வே. சுந்தரலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''கிறிஸ்ரி கொன்ஸ்றக்ஷன்'',
(பொறியியலாளர்களும், நிர்மாணிகளும்)

ஞா. கிறிஸ்ரி பிரேமகுமார்,
இல. 17A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[30837]

---

## அளவெட்டி குப்பிழாவளைப் பிள்ளையார் கோயில் பவ வருட மஹோற்சவம்-1994

1. கொடியேற்றம் 14 – 05 – 1994 சனிக்கிழமை
காலை 10-30 மணி

### திருவிழாக் கால நேர அட்டவணை

| | பகல் | | இரவு | |
|---|---|---|---|---|
| அபிஷேகம் | காலை | 8-30 | மாலை | — |
| பூசை | காலை | 9-15 | மாலை | 3-30 |
| தம்ப பூசை | காலை | 10 00 | மாலை | 4-00 |
| வசந்த மண்டபப் பூசை | காலை | 10-30 | மாலை | 4 30 |
| திருவிழாப் பூ தீதி | பிற்பகல் | 1-00 | மாலை | 6-00 |

2. சப்பறத் திருவிழா 22 – 05 1994 ஞாயிற்றுக்கிழமை
மாலை 5-00 மணி

தேர்த் திருவிழா 23 05 – 1994 திங்கட்கிழமை
காலை 9 00 மணி

3. தீர்த்தத் திருவிழா 24 – 05 1994 செவ்வாய்க்கிழமை
காலை 10 00 மணி

### தேர், தீர்த்தத் திருவிழாக் கால நேர அட்டவணை

| | தேர் | | தீர்த்தம் | |
|---|---|---|---|---|
| | காலை | மாலை | காலை | மாலை |
| அபிஷேகம் | 6 30 | — | 6-30 | — |
| பூசை | 7 00 | | 7 00 | |
| தம்ப பூசை | 7 30 | 4-00<br>4-30 | 7-00<br>7-30 | 3-00<br>4 30 |
| வசந்த மண்டபப் பூசை | 8 00 | 5 00 | 9-00 | கொடியிறக்கம் 3-30 |
| மகா தீர்த்தம் | — | — | 10-00 | — |

தேர்த்திருவிழாவன்று பிற்பகல் 2மணியளவில் தேர் மண்டபத்தில் பச்சை சாத்தல் நடைபெற்று பிற்பகல் 3-30 மணி அளவில் மூர்த்திகள் ஆலயத்திற்கு எழுந்தருள்வர்.

4. பூங்காவனத் திருவிழா 25 – 05 – 1994 புதன்கிழமை

பகல் அபிஷேகம் நடைபெறும் இரவுத் திருவிழா மாலை 6 மணிக்குப் பூர்த்தியடையும்.

குறிப்பு:


தேர்த் திருவிழா அன்னதானத்துக்கு உதவுபவர்கள் செயலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும் அன்னதானத்துக்கு முறையாக அரிசி வழங்குபவர்கள் தயவு செய்து அதற்குரிய தொகையைப் பணமாகச் செலுத்தவும்.

— ஆலய நிர்வாகம்

(30809)

---

## மூன்றாம் வருட இதய அஞ்சலி



**அமரர் வே. க. கு. நல்லையாபிள்ளை**

நயினையிலே அணையாத தீபமாய்: 19 - 05 - 1921
சென்னையிலே அணைந்த தீபமாய்: 15 - 04 - 1991
திதி: 11- 05- 1994

புத்தாண்டு பிறந்ததுமே உங்கள் திருமுகத்தின் மூன்றாண்டு நினைவு மலர்ந்த வீட்டதையா பாசமிகு தெய்வமே நீங்கள் பாரதநாடு சென்று பாருலகை விட்டு பாதியிலே எங்களை -
பிரிந்ததேனோ!

எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா ஈசனுடன் இணைய பிரார்த்திக்கிறோம்.

பிரிவை நினைவு கூரும்!
குடும்பத்தினர்.

(30837)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(11 – 05 – 94)



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 12 – 06 – 1914 | 11 – 04 – 1994 |

**திருமதி பார்வதிப்பிள்ளை சிவசம்பு**

(தாவடி தெற்கு கலாபவனத்தைச் சேர்ந்தவரும், இணுவில் மேற்கு சிவபதியில் வாழ்ந்தவரும் ஆவார்)

எங்கள் அன்பு அன்னையே! அன்பின் வடிவாய், பாசத்தின் உருவாய், பண்பின் சிகரமாய் எம்மை எல்லாம் வளர்த்த எங்கள் கண்கண்ட தெய்வமே! எம்மை விட்டு பல நாட்கள் சென்றாலும், உங்கள் நினைவு எம் இதயத்தில் ஒளி வீசும் சுடராய் என்றும் ஒளிரும். தங்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சி சிவசுப்பிரமணியம்,
[தாவடி இந்து. த. க. பா]
''சிவபதி''
ஆஸ்பத்திரியடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

(30826)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

## மரணப்படை ஒன்று மட்டுமா?

தென்னிலங்கையில் மரணப்படைகள் அரசியல் கொலைகளைப் புரிந்தன என்பது பழைய சங்கதி. ஜே. வி. பி இயக்கத்தைப் பூண்டோடு அழிப்பது என்ற போர்வையில் பல்லாயிரக் கணக்கானோரை மரணப்படைகள் கொன்றொழித்தன.

இரவில் வீடுகளுக்குச் சென்று விசாரணைக்கு என்று கூட்டிச் செல்லப்பட்டவர்கள் வீதிகளில் ரயர் போட்டு எரிக்கப்பட்டும் தலைகள் துண்டிக்கப்பட்டு ஆறுகள் குளங்களில் போடப்பட்டும், காட்டுப்பகுதிகளிலும் மலைப்பிரதேசங்களிலும் புதைக்கப்பட்டும் சாகடிக்கப்பட்டது நாடறிந்ததே.

ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளுக்கு அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் எதிரானவர்களும், மாறான கருத்துள்ளவர்களும், அவர்களின் மோசடிகள், ஊழல்கள், திருகுதாளங்களை வெளிப்படுத்த முயன்றோரும் கொல்லப்பட்டனர்.

அந்த மட்டத்தோடும் நிற்கவில்லை. ஐக்கியதேசியக்கட்சி அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரானவர்களும், கருத்து முரண்பாடு உடையவர்களும் கூடப் பலி கொள்ளப்பட்டனர்.

இந்த மிருகத்தனமான கொலைகளை ஆளுங்கட்சியினர் அமர்த்திய தனிப்பட்ட மரணப்படைகள், கூலிப்படைகள் மட்டும் கட்டவிழ்த்துவிடவில்லை.

இராணுவம், பொலிஸ் மற்றும் படைகளைச் சேர்ந்தவர்களும் இந்தக் கோரக்கொலைகளில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தனர். பொலிஸ் பகுதியின் விசேட பிரிவு ஒன்று கூட ஆளுங்கட்சித் தலைவர்களின் அரசியல் விரோதிகளை கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. பொலிஸிலும், படையிலும் உள்ளவர்களே பல மரணப்படைகளுக்கு வழிநடத்துநர்களாகவும் தலைவர்களாகவும் பணிபுரிந்ததாகவும் கூறப்பட்டது.

ஜே. வி. பி ஒழிப்புக் காலத்தின் பின்னரும், தொடர்ந்தும், மிக அண்மையிலும் கூட மரணப்படைகள் பல அரசியல் கொலைகளைச் செய்திருக்கின்றன. ஆனால்—

உதவிப் பொலிஸ் மா அதிபராக இருந்த உடுகம்பொல, அரசியல் படுகொலைகள் சம்பந்தமாகப் பல விடயங்களைப் பகிரங்கப்படுத்தியதன் பின்னர் —

சூரியகந்த புதைகுழி விவகாரம் ஏற்படுத்திய பரபரப்பு அடங்கிய பின்னர் —

ஐக்கிய தேசியக் கட்சியில் உட்கட்சி மோதல் தொடங்கியதைத் தொடர்ந்து —

மரணப்படை விவகாரம் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கிறது. மரணப் படையைக் கண்டுபிடித்து, அதில் அங்கம் வகிப்பவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதில் பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகத் தகவல்கள் வருகின்றன. மரணப் படைக்குப் பின்னால் நின்ற அரசியல் வாதிகள் அதற்குக் குந்தகம் விளைவிக்கிறார்களாம்.

இந்தத் தகவல்களைக் கூர்ந்து நோக்கினால், தனியார் மரணப் படை ஒன்றே அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசியுடனும், ஆதரவுடனும் இயங்கியதாக, இயங்குவதாகக் காண்பிக்க முயற்சிக்கப்படுகிறது. பொலிஸார் மற்றும் படையினருக்கு இதில் தொடர்பில்லை என்பதுபோல காட்ட முயற்சிக்கப்படுகிறது.

அரசியல் கொலைகளுக்கு உடந்தையாக இருந்த, திட்டமிட்டு வழிநடத்திய பொலிஸார், படையினர் பலர் பதவி உயர்வுகள் பெற்றதாகக் கூறப்பட்டது. இப்போது அவர்களைப் பற்றி எல்லாம் மறந்து அல்லது மறைத்து தனியார் மரணப் படைக்கு பின்னால் மட்டும் தொடர்வது ஏன்?

தெற்கில் அரசியல் நிலைமை கொந்தளிப்பாகவும், நிலையற்றும் இருக்கிறது. ஆளுங்கட்சிக்குள் மோதல்கள் நடக்கின்றன. எதிரணியே தேர்தலில் வெல்லும் அறிகுறிகள் அனேகமாக உள்ளன. எனவே தேர்தல் ஒன்று நடந்து, அரசு மாறுவதற்கு முன்னர், பொலிஸாரினதும், படையினரதும் கரங்களில் இரத்தக் கறை படியவில்லை என்பதனைக் காட்டுவதற்கான ஒரு தந்திரமாகவே இது தென்படுகிறது!

# கிளிநொச்சியில் இம்முறை அதிக நிலத்தில் நெற்செய்கை

கிளிநொச்சி மே 11

கிளிநொச்சியில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை கூடுதலான நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட உள்ளது.

கடந்த வருட இறுதியில் பெய்த பெருமழையினால் இரணைமடுக்குளம் உட்பட அனைத்துக் குளங்களிலும் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது.

இதனால் இந்த முறை அதிகளவு நிலங்களில் சிறுபோகம் நெற் செய்கை பண்ணப்பட உள்ளது:

தற்போது விதைப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. குளங்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. (இ-76)

# பம்பாய் வெங்காய உற்பத்தி; விவசாயிகள் மீண்டும் ஆர்வம்

அராலி, மே 11

அராலிப் பகுதி விவசாயிகள் பம்பாய் வெங்காய செய்கையில் மீண்டும் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் அராலிப் பகுதியில் 400 முதல் 450 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பம்பாய் வெங்காயம் பயிர் செய்ப்பட்டது.

1991க்கு பின் 80 முதல் 40 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பயிர் செய்யப்பட்டது. ஆனால் இவ்வருடம் 100 ஏக்கர் வரையில் பம்பாய் வெங்காய செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஜூலை மாதமளவில் அறுவடை செய்யக் கூடிய நிலையில் பயிர்கள் காணப்படுகின்றன. சின்ன வெங்காயம் சந்தையில் அதிக விலைக்கு விற்பதால் விவசாயிகள் பம்பாய் வெங்காய உற்பத்தியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். (த-13)

## திருகோணமலையை அரசு சிங்கள மயப்படுத்த திட்டம்

திருகோணமலை நகரை முழுமையமாக சிங்கள மயப்படுத்தும் நோக்குடனேயே கைத்தொழில் பேட்டை ஒன்றை அங்கு அமைக்க அரசு முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கைத்தொழில் பேட்டையை அமைப்பதற்காக 400 தமிழ்க் குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களை விட்டு வெளியேற்ற திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைத்தொழில் பேட்டைக்கென சிங்கள தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இப்பகுதிகளில் குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். (உ-த)

### சாவகச்சேரியில்

## சுகாதாரச் சீர்கேடுகளை களைய நடவடிக்கை!

சாவகச்சேரி மே 11

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தேநீர் சாலைகள், உணவகங்கள் மற்றும் பேக்கரிகளில் காணப்படும் சுகாதாரச் சீர்கேடுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதில் சாவகச்சேரி நகரசபையும் சாவகச்சேரி சுகாதார சேவைத் திணைக்களமும் இணைந்து செயல்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையின் பொதுசுகாதாரப் பரிசோதகர் சாவகச்சேரி மீன் சந்தையில் திடீர்ப் பரிசோதனையின் போது, சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடியன என்று கருதப்படும் மரை இறைச்சியை விற்ற சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது கைப்பற்றப்பட்ட இருபத்தொரு கிலோகிராம் இறைச்சி வற்றலும் நகரசபையின் சுகாதார பரிசோதனைக் குழுவினால் உடனடியாக அழிக்கப்பட்டது. (எ-31)

## கமத்தொழில் கடன் திட்டம் இலங்கை வங்கி ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 11

யாழ் மாவட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளை புனரமைக்கும் நோக்குடன் கமத்தொழில் கடன் திட்டம் ஒன்றை இலங்கை வங்கி நடைமுறைப் படுத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

வங்கியின் கிளைகளில் 10 ஆயிரம் ரூபாவரை கடன் பெறமுடியும் என்றும்—

இக்கடன் திட்டம் இம்மாதம் 31ஆம் திகதிவரை அமுல் செய்யப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர் என்பதை உறுதி செய்பவர்களுக்கே இக்கடன் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமணப் பதிவு

யாழ்ப்பாணம், மே 11

இடப்பெயர்ந்த தீவக நலன் காக்கும் கழகம், தீவகத்தைச் சேர்ந்த 225 குடும்பங்களுக்கு ஆலயத்தில் இலவச திருமணப் பதிவைச் செய்து வைத்தது:

கழகத் தலைவர் திரு வ. ஐயாத்துரை தலைமையில் தீவக கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. செம்மணன் திருமணப் பதிவு வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

பிரதம விருந்தினரா யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி கலந்து கொண்டார். (ஒ-17)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 11

யாழ் மத்திய கல்லூரி லியோ கழகம் அண்மையில் சுதுமலை தெற்கைச் சேர்ந்த பொ. இராசலிங்கம் என்பவருக்கு முச்சக்கரச் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியது.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இராசலிங்கம் மரத்தில் இருந்து வீழ்ந்ததினால் இடுப்புக்குக் கீழ் செயல் இழந்த நிலையில் இருந்து வருகிறார். (இ)

# கொழும்பு தமிழ் குடியிருப்பாளர் ஒரு தடவை பதிந்தால் போதும்

கொழும்பு, மே 11

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாடகைக்கு குடியிருக்கும் தமிழ் மக்கள் தமது பெயர் விபரங்களை தமது பகுதி பொலீஸ் நிலையத்தில் ஒரு தடவை பதிவு செய்துகொண்டால் போதும்; மீண்டும் மீண்டும் பதியத் தேவையில்லை மீண்டும் பதியக் கோரும் அறிவுறுத்தல் எதனையும் பாதுகாப்பு அமைச்சு வழங்கவுமில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தம்மை சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. ஜோசப் பரராஜசிங்கத்திடம் இவ்வாறு தெரிவித்தார்.

வெள்ளவத்தை, பம்பலபிட்டி, தெஹிவளை போன்ற இடங்களில் வாடகைக்கு குடியிருக்கும் தமிழர் மீண்டும் பதியவேண்டும் என்று வெளியான செய்தி குறித்து வனசிங்காவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை —

வடக்கு - கிழக்கிலிருந்து கொழும்புக்கு வந்து தற்காலிகமாக தங்குவோர் தமது பெயர்களைப் பொலிஸில் பதிந்துவிட்டு—

மீண்டும் தமது பிரதேசங்களுக்கு சென்ற சிறிது காலம் தங்கியிருந்துவிட்டு பின்னர் கொழும்புக்கு திரும்பினால் புதிதாக பொலீஸ் நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டும் என்றும் அவர் சொன்னார். [த]

## ஆத்திசூடி போட்டி

வட்டுக்கோட்டை, மே 11

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகம் 8-15 வயது மாணவர்கள் மத்தியில் ஆத்திசூடிப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபக வித்தியாசாலை மண்டபத்தில் எதிர் வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் போட்டிநடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு லயன்ஸ் கழகத்தினர் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளனர் (க161)

### ஜி. சீ. ஈ சாதாரணதர

## பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் கிடைக்கவில்லை

வடமராட்சி, மே 11

மூன்று வாரங்களுக்கு முன்னர் வெளியான ஜி. சீ. ஈ. சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் யாழ் குடா நாட்டைச் சேர்ந்த பல தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

வல்வெட்டித்துறை, புத்தூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களைச் சேர்ந்த பல தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இப்பெறுபேறுகள் கிடைக்காமையினால் அவர்கள் பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளனர். (இ-173)

### ஒரு மூடை கோதுமை மாவுடன் ஒரு கிலோ

# குரக்கன் மா கலந்து பாண் தயாரிக்கும் முறை வருகிறது!

### யாழ். பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், மே 11

ஒரு மூடை கோதுமை மாவுடன் ஒரு கிலோ குரக்கன் மா சேர்த்து பாண் தயாரிக்கும் திட்டம் ஒன்றை யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் செயற்படுத்த இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாவனையாளருக்கு ஊட்டச் சத்துடனான பாணை வழங்குவது, [illegible] ஆகிய நோக்கங்களை [illegible] இத்திட்டம் அமுல் படுத்தப்படவிருப்பதாக சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் தெரிவிக்கிறார்.

[illegible] இத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் கூறினார். (எ-162)

### ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்படும்

# அரசியல் குற்றப் பிரேரணை இனி நாடாளுமன்றத்திலேயே தாக்கல்

### அரசமைப்பு விவகார அமைச்சு நகல் திருத்தம் தயாரிப்பு

கொழும்பு மே 11

எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்படும் அரசியல் குற்றப் பிரேரணை (Impeachment Motion) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும்—

அதன் ஒரு பிரதி ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் அரசமைப்பு விவகார அமைச்சு தயாரித்துள்ள நகல் திருத்தச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

சகல அரசியல் கட்சிகளுக்கும் இத் திருத்தச் சட்ட நகல் அனுப்பப்பட்டுள்ளது. கட்சிகளின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுவதாக அரசமைப்பு விவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்:

இப்போதைய சட்டத்தின் படி அரசியல் குற்றப்பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் சபாநாயகருக்கு கிடையாது.

திருத்தச் சட்டத்தின்படி, சபாநாயகரிடம் அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை கையளிக்கப்பட்டவுடன் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தற்போதைய சட்டத்தில் உள்ள இந்த இடைவெளி நீக்கப்பட்டவுடன், அரசியல் குற்றப்பிரேரணை விஷயத்தில் இலங்கை அரசமைப்பு, அமெரிக்க அரசமைப்புக்கு ஒத்ததாக வந்து விடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் இப்படியான பிரேரணை அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரினதும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

### பிரேமா சிலை திறப்பில் டி.பி. இல்லை:

## அரச நாடாளுமன்ற குழு கூட்டத்தில் சூடான விவாதம்!

### விஜேதுங்கா சீறிப் பாய்ந்தார்

கொழும்பு, மே 11

மேதினமன்று இடம்பெற்ற பிரேமதாஸா சிலை திறப்பு நிகழ்ச்சியில் முன்னர் அறிவிக்கப்பட்டபடி ஜனாதிபதி விஜேதுங்கா கலந்து கொள்ளத் தவறியது கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சூடான விவாதத்தை ஏற்படுத்தியது.

சுகயீனம் காரணமாக ஜனாதிபதி சிலை திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை என்ற நிலையில் மறுநாள் நடந்த அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்கு ஜனாபதி விஜேதுங்கா தலைமை வகிக்க வந்திருந்தார்.

பிரேமதாஸா சிலை திறப்பு விவகாரம் விவாதத்துக்கு வந்தபோது ராஜாங்க அமைச்சர் மகேந்திரா விஜேரத்ன பேசினார்;

அவர் சொன்னதாவது: ''பிரேமதாஸா சிலையை ஜனாதிபதி திறந்து வைப்பார் என்று ரூபவாஹினி அறிவித்தது. முதல்நாள் ஜனாதிபதி சிலையை நேரில் சென்று பார்வையிட்டதையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது. இந்த நிலையில் ஜனாதிபதி ஏன் சிலை திறப்பில் கலந்துகொள்ளவில்லை?'' — என்று ராஜாங்க அமைச்சர் கேட்டார்.

இக்கேள்வியால் வெறுப்படைந்த ஜனாதிபதி, ராஜாங்க அமைச்சரை இருக்கையில் அமரும்படி உத்தரவிட்டார்.

பின்னர், ''உங்களுடைய வரம்பு உங்களுக்குத் தெரிய வேண்டும். எங்கு நின்று பேசுகிறீர்கள் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். என்னிடம் கேள்வி கேட்க உங்களுக்கு உரிமை கிடையாது'' — என்றார் திரு. விஜேதுங்கா.

''எவருக்கும் எந்த நேரத்திலும் சுகயீனம் வரமுடியும்'' — என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். விவாதம் சூடாவதைத் தணிக்க காலி மாவட்ட எம். பி. புதிய குருகுலரத்னா அஹங்கல ரயில் — பாடசாலை வான் மோதல் பற்றிய விஷயத்தின் மீது பேசத்தொடங்கினார், (ஒ-எ)

## பட்டதாரி பயிலுநர் விவரம் கோருகிறது ஆசிரிய சங்கம்

யாழ்ப்பாணம், மே 11

பட்டதாரி பயிலுநர் ஒரு வருட சேவையை முடித்துக் கொண்டு அதே வேலையில் இருந்து கொண்டு பட்டம் பெற்று ஒரு வருட சேவையை முடித்தும் கொண்டு நிரந்தர பட்டதாரி நியமனத்துக்கு விண்ணப்பித்து இதுவரை நிரந்தர பட்டதாரி நியமனம் கிடைக்காத அனைவரும் நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு நல்லூரில் உள்ள தமது பணிமனையில் தம்மை சந்தித்து தங்கள் விவரங்களை சமர்ப்பிக்குமாறு இலங்கை தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் கேட்டுள்ளார்.

அவர்களது விவரங்களை சங்கப் பிரதிநிதி ஒருவர் அடுத்த வாரம் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு நேரடியாக எடுத்துச் செல்வார் என்றும் —

அவர்களது நியமனம் தொடர்பாக சங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு இனி உதவி நிபந்தனை அடிப்படையில்

### ஜப்பான் பிரதி தூதர் அறிவிப்பு

கொழும்பு, மே 11

இலங்கைக்கு ஜப்பான் தொடர்ந்து உதவுவது இனி நிபந்தனையின் அடிப்படையில் இடம் பெறலாம்.

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகத்தின் பிரதி தூதர் இட்ஸுவோ ஹஷிமோட்டோ முன்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனை வெளியிட்டார். அவர் மேலும் சொன்னதாவது:

பொருளாதார வளர்ச்சி குறித்து கொழும்பு அரசுப் பிரதிநிதிகளும், மக்களும் அரை மனதுடனே செயற்பட்டு வருகின்றனர். இலங்கையின் நிலவரம் குறித்து நிச்சயமற்ற கொள்கையை ஜப்பான் கொண்டுள்ளது.

இலங்கை பெறும் உதவிகளின் அளவு குறையவுள்ளது. இலங்கைக்கு உதவும் பல நாடுகள் இலங்கைக்கு தொடர்ந்து உதவுவதில் பின்னடிக்கின்றன ஆகவே ஜப்பானின் பங்கு முக்கியமானதாகும்.

''ஜப்பானின் சிநேகபூர்வமான உணர்வுகளில் மட்டும் இலங்கை அரசு தொடர்ந்தும் தாங்கியிருக்க முடியாது. பொருளாதார அபிவிருத்தி குறித்து இலங்கை அரசு பாரதூரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை இலங்கை தொடர்ந்தும் மேற்கொள்ளும் என ஜப்பான் நம்புகின்றது.

அதிக விடுமுறை நாட்களை வழங்கும் கொள்கை நாட்டுக்கு உதவாது. பொருளாதார வளர்ச்சியில் தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகள் இலங்கையை முந்தி விட்டன.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் ஜப்பான் இலங்கைக்கு தொடர்ந்து உதவும்'' — என்றும் அவர் கூறினார். (ஒ-ல)

## ஏவுகணை சோதனையை இந்தியா நிறுத்தவில்லை

### பிரதமரின் அலுவலகம் மறுப்பு

இந்தியா தனது ஏவுகணைப் பரிசோதனைகள் அனைத்தையும் ஒத்திவைத்துள்ளதாக பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியை இந்தியப் பிரதமரின் அலுவலகம் மறுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் எதிர்வரும் 19ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதை ஒட்டி அமெரிக்காவுடன் ஒரு சுமுக சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் ஏவுகணைப் பரிசோதனைகள் அனைத்தையும் இந்திய அரசு ஒத்தி வைத்துள்ளதாக அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை —

இந்தியா தனது அணுத்திட்டங்களை கைவிட தொடர்ந்தும் அமெரிக்கா அழுத்தம் பிரயோகித்து வருவதாக இந்தியப் பிரதமரின் பேச்சாளர் ஒப்புக் கொண்டார். (உ-5)

## புதிய பணிமனை திறப்பு விழா

கொழும்புத்துறை [illegible] இந்து இளைஞர் மன்றத்தின் புதிய பணிமனைத்திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 8 மணியளவில் சிவபோகசுவாமி ஆச்சிரமத்தில் நடைபெறும். யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பணிமனையைத் திறந்து வைப்பார்.

யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் மன்றப்பெயர்ப் பலகையைத் திறந்து வைப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். திரு. ஆறு. திருமுருகன் அருளுரை நிகழ்த்துவார். (க)

## கணித விஞ்ஞான வினா-விடை போட்டி

யாழ்ப்பாணம், மே, 11

யாழ் வலயம்-1இற்குட்பட்ட கோட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கிடையிலான கணித விஞ்ஞான வினா-விடைப் போட்டி வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர் வரும் சனிக்கிழமை காலை 9-00மணிக்கு இடம்பெறும்.

யாழ் வலயம் -1 கணித விஞ்ஞான முகவை நிலையத்தினால் நடத்தப்படும் போடி போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கான சான்றிதழ்கள் போட்டியின் இறுதியில் அன்றைய தினமே வழங்கப்படு. (ஒ

## இலவச வெளியீடு

''சிவஞானப்பிரகாசம்'' எனும் இலவச வெளியீட்டை வண்ணை கஸ்தூரியார் வீதியில் உள்ள யாழ்ப்பாணம் மெய்கண்டதேவர் ஆதீனத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

சைவசித்தாந்தம் பற்றி காலஞ் சென்ற பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய மதிப்புரை இவ்வெளியீட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 26 குடும்பங்கள் தெரிவு

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் சமூகஸ்தாபனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் உறவினர்களின் உதவியுடன் அமுல்படுத்தப் படவுள்ள வீடமைப்பு நிவாரணத்திட்டத்திற்கு வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இருந்து 26 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஒ - 162)

## பத்திரிகை கவுன்சிலுக்கு புதிய உறுபபனர்

பத்திரிகைக் கவுன்சிலுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்போதுள்ள தலைவர், உறுப்பினர்கள் பதவி விலகும்படி கோரப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தலா இரண்டு பேரின் பெயர்களைச் சமர்ப்பிக்கும்படி கொழும்பில் உள்ள பத்திரிகையாளர் சங்கங்களை தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## க. பாலசுந்தரம்

அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய உதவி நில அளவை அத்தியட்சகருமான திரு. க. பாலசுந்தரம் 9-5-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தசாமியின் ஏகபுத்திரனும், திரு. திருமதி சிவகுருவின் மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், பத்மாவதி, இராசேந்திரன், கமலாவதி, பாலேந்திரன் (விலை மதிப்பீட்டுத் திணைக்களம்), இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வயித்திலிங்கம், வினோதினி, மாணிக்கவிங்கம், சிவநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசுகி, சுமதி, அகிலா, வரதன், பிரதீபன், தயாளினி, விஜித்கோபி, செந்தூரன், கார்த்திகா, சுஜந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-05-94 இல் வல்வை ஊறணி மயானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பா. பாலேந்திரன்
(மகன்)

அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை. (30827)

## தில்லையம்பலம் இரத்தினம் (பாலசிங்கம்)

(வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த தில்லையம்பலம் இரத்தினம் 09-05-1994 இல் கனடாவில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா, நல்லதங்கம் தம்பதிகளின் மருமகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன், சிறிகாந்தன், உருத்திரகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, வனிதா, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ருக்ஷா, திவ்வியா ஆகியோரின் அன்புப் பேரனும், பராசக்தி, செல்வராசா, காலஞ்சென்ற குமாரசாமி, இராசமணி, தவமணி, புவனேஸ்வரி, கமலாம்பிகை, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நடராசா, சிவகுரு, S. P. சாமி, தேவராசா, பாலசிங்கம், நாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
தி. செல்வராசா
தி. செல்லத்துரை
(சகோதரர்கள்)

66/1, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (30836)

## செல்வி துளசிவேணி இராமலிங்கம்

(B. Sc Dip in Ed)

(நயினாதீவு)

நயினாதீவைச் சேர்ந்த செல்வி துளசிவேணி இராமலிங்கம் (முன்னாள் விரிவுரையாளர், ஆசிரியபயிற்சிக் கலாசாலை அளுத்கம) 06-05-94 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், சந்திரசேகரம், திருமதி புனிதவதி பாலசுந்தரம், திருமதி திலகவதி யோகலிங்கம், காலஞ்சென்ற மகாதேவா, மகேஸ்வரன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியமணி, பாலசுந்தரம், காலஞ்சென்ற யோகலிங்கம், வசந்தா விசாலாட்சி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09-05-94 இல் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ மகேஸ்வரன்
(சகோதரன்)

பிரபாகரன் வீதி,
இருபாலை. (30823)

## பவளரத்தினம் காசிப்பிள்ளை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளரத்தினம் காசிப்பிள்ளை அவர்கள் கொழும்பில் 9-5-1994 (திங்கள்) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், கணேசரட்ணம், நவரட்ணம், திருமதி புஸ்பராணி ஜெயரட்ண, யோகரட்ணம், திருமதி சறோஜினிதேவி சிங்காரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரதீபா, பிரசாந்தி, பதிதரன், ஜெந்தினி, சஜீதரா, மலர்விழி, கயல்விழி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 51, ஸ்ரேசன் அவெனியூ வெள்ளவத்தை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
கா. யோகரட்ணம்
(மகன்)

750, பலாலி வீதி,
திருநெல்வேலி. (30835)

## கணபதி செல்லத்துரை

உரும்பிராய் மற்கு அன்னுங்கையைச் சேர்ந்த கணபதி செல்லத்துரை 10-5-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற நா கணபதி - இலட்சுமி தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற ச தெய்வேந்திரம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பூமலரின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரி, வாசுகி, சாரதா, காண்டீபன், ஸ்ரீவாணி, கோமலதாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி, மார்க்கண்டு, சண்முகம், கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரரும், தெ அரியரத்தினம் (சட்ட ஒப்பந்தக்காரர்), தேவராசா (குணம்), பஞ்சவர்ணம், சோதிலிங்கம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், காலஞ்சென்ற தேவமலர் மற்றும் செல்லத்துரை (மணி), இராசமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (11-5-94) நண்பகல் 12-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் தெற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
தெ அரியரத்தினம்
(மைத்துனர்)

(30840)

கொழும்பில் தேடுதல் தொடர்வதால்

# பாதாள உலக கிரிமினல்கள் வேறு பகுதிகளுக்கு ஓட்டம்!

கொழும்பு, மே 11

கொழும்பு மாநகரில் பொலிஸார் ஆரம்பித்துள்ள பாரிய தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து அங்கு செயற்பட்டு வந்த 'பாதாள உலக' கிரிமினல்கள் (குற்றவாளிகள்) நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு தப்பி ஓடுகின்றனர்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ''த ஐலண்ட்'' நாளிதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தற்போது இடம்பெற்று வரும் இத்தேடுதலில் 5 கிரிமினல்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சில குறிப்பிட்ட நபர்களைக் கொல்வதற்கு தனிப்பட்டவர்கள் சிலர் லட்சக்கணக்கான ரூபா பணத்தைத் தந்து தங்களை 'ஒப்பந்தம்' செய்திருப்பதாக கைதான ஐந்து கிரிமினல்களும் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரின் 'பாதாள உலகில்' சுமார் 20 கிரிமினல்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் கொலைகள் செய்வதற்கு இப் 'பாதாள உலக' கிரிமினல்கள் இரகசிய அமைப்பு ஒன்றைச் செயற்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைகளை புரிபவர்கள் அவை பற்றிய விவரங்களைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கும் சாத்தியத்தைத் தடுப்பதற்கு இன்னொரு இரகசிய அமைப்பு ஒன்றையும் இப் 'பாதாள உலக'க் கிரிமினல்கள் அமைத்து உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பொலிஸ் கொமாண்டரும் அம்பாறை தாக்குதலில் பலி!

கொழும்பு, மே 11

கடந்த நான்காம் திகதி விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்டம் — சென்றல்காம்ப் பகுதியில் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிஸாரில் ஒருவர் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள பொலிஸ் பிளாட்டூனின் கொமாண்டர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சப் இன்ஸ்பெக்டரான கொல்லப்பட்ட பொலிஸ் கொமாண்டருடன் வேறு இரு பொலிஸாரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடந்தபோது இவர்கள் மூவரும் சீருடையில் இருக்கவில்லை என்றும் அவர்களிடமிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் கொண்டு சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் எல்லாம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

# சிங்கள மீனவர்களுக்கு கடலில் பாதுகாப்பு வழங்க முடியாது!

### கடற்றொழில் அமைச்சர் நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, மே 11

'சிங்கள மீனவர்களுக்கு கடலில் பாதுகாப்பு வழங்க முடியாது''

கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா அண்மையில் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

''சிலாபம் மாவட்டம் பத்தலகுண்டுவ பகுதியில் கடலுக்குச் சென்ற சிங்கள மீனவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டனர். நான் அந்தக் கிராமத்துக்குச் சென்று பார்த்தேன். தங்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமா? என்று அம்மீனவர்கள் என்னைக் கேட்டனர். முடியாது என்று நான் கூறிவிட்டேன். கொழும்பில் வைத்தே படுகொலைகள் நடைபெறும் போது கடலில் எப்படிப் பாதுகாப்பு வழங்க முடியும்? மீனவருக்கு பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமானால் சிலாவத்துறை படைமுகாம் ஊக்குவிக்கப்பட வேண்டும்'' — என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

# திருமலையில் 'ரெலோ' கூட்டம் கூச்சலிட்டு குழப்பப்பட்டது

### இசைக்கச்சேரியை ரசித்தனர் மக்கள்

கொழும்பு, மே 11

திருகோணமலையில் நடந்த ரெலோ இயக்க மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சி கூச்சல் குழப்பத்துடன் முடிவடைந்தது.

தமது அரசியல் கூட்டத்துக்கு மக்கள் வரமாட்டார்கள் என்பதை முன்னரே உணர்ந்த அந்த அமைப்பினர் திருகோணமலை முற்றவெளி மைதானத்தில் இசைக் கச்சேரி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆயிரக்கணக்கில் கூடிய மக்கள் இசைக்கச்சேரியை ரசித்தனர்.

இசைக்கச்சேரியை நிறுத்தி அரசியல் கூட்டம் நடக்கும் என்று அறிவித்ததும் கூடியிருந்த மக்கள் கூச்சலிட்டனர்.

திருகோணமலைநகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி பேச ஆரம்பித்ததும் மக்களின் கூச்சல் அதிகரித்தது அவரால் பேச முடியாது போய்விட்டது.

பின்னர்மட்டக்களப்புமாநகர சபை மேயர் செழியன் பேரின்பநாயகம் பேச எழுந்ததும் மக்கள் மீண்டும் கூச்சலிட்டனர்.

அதைத் தொடர்ந்து மீண்டும் இசைக்கச்சேரி ஆரம்பமானது. மக்கள் அமைதியாக இருந்தனர்.

கச்சேரி முடிந்ததும் அரசியல் கூட்டம் சனமின்றி நடந்தது. (ஒ-3)

## நாளை

தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் படித்த 30 யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு நாளை சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் ஆரம்பித்து வைக்கப்படும். கழகப் பொறுப்பாளர் திரு. ரவி இதனை ஆரம்பித்து வைப்பார். (ஒ-117)

## பரீட்சை

யாழ்ப்பாணம்' மே 11

தேசிய கல்வி நிறுவனத்தின் கல்விமாணிபட்டக்கற்கை நெறியின் 94/96 கல்வியாண்டுக்கான புகுமுகத்தேர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இந்த தேர்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ சென் ஹெரீஸ் வி.க அணி எதிர் மகிழாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க. அணி.

★ சென். அன்ரனீஸ் அணி எதிர் அரியாலை ஐ வி க. அணி. (உ-20)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மோகனதாஸ் 'ஏ' அணியை எதிர்த்து ஆவரங்கால 'பி' அணி மோதும். (உ)

காமினியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் வழக்கின் காரணமாக கட்சி உறுப்பினர்கள் மக்கள் முன் செல்ல முடியாதிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை —

டாக்டர் விஜேசோமா நேற்று முன்தினம் ஐ.தே.க. தேசியப் பட்டியல் எம். பிக்களான எம். எச். அமீத், அலெக் றொபர்ட்ஸன் ஆகியோரைச் சந்தித்து, காமினிக்கு இடமளிக்குமுகமாக எம். பி பதவிகளை இராஜினாமாச் செய்யும்படி கேட்டுக் கொண்டாராகவும் —

எனினும் அவர்கள் இருவரும் அளித்த பதில், ஒவே வகையாக அளித்த பதிலை ஒத்ததாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

இவ்வாண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை கடத்திய இந்தியப் பிரஜை ஒருவருக்கு விதிக்கப்பட்ட ஒரு கோடி 16 லட்சத்து 61 ஆயிரத்து 650 ரூபா அபராதம் 25 லட்ச ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் பின்னர் தங்கக் கடத்தல் சம்பவங்களைத் துப்பறிந்து பிடிப்பதை சுங்க அதிகாரிகள் நிறுத்திக் கொண்டு விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே. 11

பருத்தித்துறை ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தி வரும் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சித் தொடரின் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படும்.

இன்று புதன்கிழமை காலை 8.15 மணிக்கு திரு. எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நிகழும் வைபவத்தில் வசதி குறைந்த மாணவர்கள் 12 பேருக்கு அவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார். (உ)

## தொடர்ந்தும் பணி புரிவார்

கொழும்பு, மே. 11

சண்டே ஒப்சேர்வர் மற்றும் டெய்லி நியூஸ் ஒப்சேர்வர் மாலைத் தினசரி ஆகியவற்றின் ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்றும்படி திரு எச். எல். டி. மஹிந்தபாலாவை லேக்ஹவுஸ் நிறுவனத்தின் புதிய தலைவர் சரத் அமுனுகம கேட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து திரு மஹிந்தபால ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார் என்று லேக்ஹவுஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் சுனில் ரொட்ரிகோ ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து திரு. மஹிந்தபாலாவும் தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

# மேலும் 11 டி. ஐ. ஜி. மார் நியமனம் பெறுவர்!

கொழும்பு, மே 11

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக (டி. ஐ. ஜிக்களாக) மேலும் பதினொரு பேரை நியமிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இம் மாத இறுதியில் புதிய நியமனங்கள் இடம்பெறவுள்ளன.

இப்போது பொலிஸ் திணைக்களத்தில் 40க்கு அதிகமான பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் சிலர் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுகின்றனர்.

புதிய பதினொரு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை தெரிவு செய்வதற்காக கடந்த ஏப்ரல் மாதம் பொதுச் சேவை ஆணைக்குழு நடத்திய நேர்முகப் பரீட்சைக்கு 50 சிரேஷ்ட பொலிஸ் அதிபர்கள் தோற்றியிருந்தனர்.

தேவையான ஆளணி மற்றும் தளபாட வசதிகள் இல்லாமல் மேலும் புதிதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிகளை அரசு உருவாக்குவது குறித்து பொலிஸ் வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் மேலும் பதினொரு புதிய சிரேஷ்ட பொலிஸ் அதிபர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (ஒ.எ)

கூரேயின் சதி பற்றிய செய்தி குறித்து

# ராவய ஆசிரியரை விசாரிக்க அனுமதி கேட்கிறார் டி. ஐ. ஜி

கொழும்பு, மே 11

அரசாங்கத்தைக் கவிழ்க்க அமைச்சர் சிறிசேன கூரேயும் இராணுவ மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் சேர்ந்து சதி செய்தார்கள் என்ற தகவல் குறித்து 'ராவய' ஆசிரியரை விசாரணை செய்ய இரகசியப் பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.டி. ஏ. ராஜபக்ஸ அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறார்.

விசாரணையை ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் பதிலை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதிச் செய்தியை ராவய பத்திரிகைதான் வெளியிட்டது. அப்பத்திரிகைக்கு அப்படியான செய்தியைத் தாம் கொடுக்கவில்லை என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் மறுத்துள்ளார் என்றும் பிரதமர் தெரிவித்தார். [ஒ-ா]

# 'கம்உதாவ' வைபவம் மீண்டும் பிரேமா பாணியில் நடக்கும்!

### இவ்வாரம் இறுதி முடிவு எடுக்கப்படும்

கொழும்பு, மே 11

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில் நடத்தியது போன்று இவ்வாண்டு 'கம் உதாவ' கொண்டாட்டத்தை தாராளமாக பணத்தைச் செலவு செய்து விமரிசையாக நடத்துவதா என்பது குறித்து அரசாங்கம் இவ்வாரம் முடிவு செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸாவின் படுகொலையின் பின்னர் பதவிக்கு வந்த விஜேதுங்க அரசு 'கம் உதாவ' கொண்டாட்டங்களை நடத்துவதை கைவிட்டது.

தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி அடைந்ததை அடுத்து, பிரேமதாஸாவின் கொள்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதில் தற்போதைய அரசு ஈடுபட்டிருப்பது தெரிந்ததே;

கம்பஹா மாவட்டத்தில் இவ்வாண்டு கம்உதாவகொண்டாட்டத்தை அரசு நடத்த உள்ளது. அதனை பிரேமதாஸா காலத்தில் நடத்தப்பட்டது போன்று படாடோபமாக நடத்துவதா என்ற பிரச்சினை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அப்படி நடத்துவது பிரேமதாஸாவின் சேவைகளை உயர்த்துமே ஒழிய விஜேதுங்க அரசின் பேரை அல்ல என்று சில அரச வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 11

மகளிர் அபிவிருத்தி நிலைய சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் நடவடிக்கைகளில் பெண்கள் பங்குபற்றல் என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கை இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் காந்திஜீ சனசமூக நிலைய மண்டபத்தில் நடத்தவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் பெண்களின் சமுதாய பெறுமானங்கள், சமுதாய விழுமியங்கள், திருமணத்தில் சீதனத்தின் விளைவுகளும் தாக்கமும், சீதனத் தடைச் சட்டமும் பெண்களும், பெண்களுக்கு அரிதாக் கிடைக்கும் பொருளாதார வாழ்வு முறைச் சந்தர்ப்பங்கள், பெண்கள் கல்வி முக்கியத்துவம் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாகம் போல், திருமதி சரோஜா சிவச்சந்திரன், திரு. எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (ஒ)

சுவிஸிலுள்ள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத்தாக்கல் செய்யலாம் என்ற சலுகையுடனும் கடிதங்கள் அனுப்பப்படுகின்றனவாம்.

அடுத்த சில மாதங்களில் ஒருதொகுதி தமிழர்கள் சுவிட்ஸர்லாந்தில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என்ற ஏற்கனவே செய்திகள் வெளியாகியுள்ளமை தெரிந்ததே. (ஒ-3)

# மரண அறிவித்தல்

## பொன்னு எல்லுப்போலை

காரைக்காட்டு வீதி வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பொன்னு - எல்லுப்போலை அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும், தியாகராசா, செல்வராசா, நாகராசா [இனி], தங்கராசா, சேதுராசா [பட்டு], மகேந்திரராசா (துரை), தங்கேஸ்வரி, இராசேஸ்வரி, சுசீலா, மகேஸ்வரி மங்கையர்க்கரசி, மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பஞ்சநாதன், காராளசிங்கம் (பப்பா) சிவஞானம், ஆனந்தம், ஜெயம் வேவித்துரை, லீலா, சுசீலா, லீலாவதி, லீனா, சரோஜாதேவி, ருக்குமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 11-5-94 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
E தியாகராசா
(மகன்)
(நிமால் பஸ் உரிமையாளர்)

43, காரைக்காட்டு வீதி,
வண் வடமேற்கு,
யாழ்ப்பாணம். (30829)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டாரால் [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org